**செய்தி வெளியீடு எண்: 48/2022** **நாள்: 22.06.2022**

**பத்திரிக்கை செய்தி**

சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்-II இன் கீழ், நேரு நகர் முதல் சோழிங்கநல்லூர் வரையில் 10 கி.மீ நீளத்திலான வழித்தடம் மற்றும் 10 மெட்ரோ இரயில் நிலையங்களுக்கான, ரூ.1021 கோடி மதிப்பீட்டிலான கட்டுமான ஒப்பந்தம் திருவாளர்கள் லார்சன் அண்ட் டூப்ரோ நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த வழித்தடம், பெரிய தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் இதர வணிக நிறுவனங்களை கொண்ட பழைய மகாபலிபுரம் சாலை வழியாக செல்கிறது. இந்த வழித்தடம் பெருங்குடி, துரைப்பாக்கம் மற்றும் சோழிங்கநல்லூர் ஆகிய இடங்களில் 3 பெரிய சந்திப்புகளை கொண்டுள்ளது. ஒக்கியம் துரைப்பாக்கத்தில் வண்டிகளை நிறுத்துவதற்காக தண்டவாளங்கள் மற்றும் பிர வழித்தடங்களுடன் இணைப்புகளை ஏற்படுத்துவதற்கான குறுக்குப் பாதைகள் திட்டமிடப்பட்டுள்ளன. ஒக்கியம் மடுவு பகுதியில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் எதிர்காலத்தில் தமிழ்நாடு சாலை மேம்பாட்டு கழகத்தின் உயர்த்தப்பட்ட விரைவு சாலை அமைக்கும் வகையில் தூண் கட்டுமானங்களை (Portal structures) அமைத்து வருகிறது.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் பொது ஆலோசகர்கள் மற்றும் ஒப்பந்த நிறுவனம் (திருவாளர்கள் லார்சன் அண்ட் டூப்ரோ) ஆகியவற்றிற்க்கிடையே ஒப்பந்தப் பணி துவக்குவதற்கான கூட்டம் இன்று (22.06.2022) நடத்தப்பட்டது. இந்தக் கூட்டத்தை திரு. எம்.ஏ.சித்திக், இ.ஆ.ப., மேலாண்மை இயக்குநர் தலைமை தாங்கினார். இயக்குநர் (திட்டங்கள்) திரு. தி. அர்ச்சுனன், தலைமை பொது மேலாளர்கள் திரு. லிவிங்ஸ்டோன் (திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு), திருமதி. ரேகா பிரகாஷ் (திட்ட வடிவமைப்பு), சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் அலுவலர்கள் மற்றும் பொது ஆலோசக அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600107.**